## 120. உம்மை நம்பி வந்தேன்

### பல்லவி

உம்மை நம்பி வந்தேன்
நான் வெட்கப்படல
உம் பாதம் நின்றேன்
நான் துக்க படல

### அனுபல்லவி

காக்கும் தெய்வம் காக்கும் தெய்வம் நீரே
என்னை காணும்தெய்வம் காணும்தெய்வம் நீரே

### சரணங்கள்

1. மனிதனின் வார்த்தை கேட்டு சோர்ந்துட்டேன்
உங்க வார்த்தையால் உற்சாகமாயிட்டேன்
- காக்கும் தெய்வம்

2. என் தலையை மூடும்படி எழும்பின
ஆமான்களை நீர் மூடி போட்டீர்
- காக்கும் தெய்வம்

3. நியாயத்தில் குற்றம்சாட்ட எழும்பின
நாவையெல்லாம் நீர் அடைத்து போட்டீர்
- காக்கும் தெய்வம்

4. நான் விழுந்துபோக வெட்டின குழிகளில்
வெட்டினவர்களே அதில் விழ செய்தீரே
- காக்கும் தெய்வம்